www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# ராஜீவ் கொலை

## இருளில் சில வெளிச்சங்கள்

ராஜீவ்காந்தி கொலையான செய்தி இரவு 10.40 மணிக்கு பொலிஸ் ஐ.ஜியான ராகவனால்தான் முதன் முதலில் உறுதி செய்யப்பட்டு ஜனாதிபதி வெங்கட்ராமனுக்கு அறிவிக்கப்பட்டது.



ராஜீவ் இறந்துவிட்டாரா, குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டோர் மத்தியில் ராஜீவ் உடல் கிடக்கிறதா என்பதை நன்கு உறுதி செய்ய வேண்டியிருந்தது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி இருதய நோய் உள்ளவர். குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டதும் அவரை பாதுகாப்பாக அவரது காவலர்கள் கொண்டு சென்றுவிட்டனர்.

கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவரான மரகதம் சந்திரசேகரை அவரது மகன் காரில் ஏற்றிக்கொண்டு பறந்து போய்விட்டார்.

கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் ராஜீவை கைவிட்டு தலை தெறிக்க ஒடி விட்டனர்.

மூப்பனார், ஜெயந்தி நடராஜன், போன்ற சிலர்தான் சம்பவ இடத்திலிருந்து ஒடிவிடாது ராஜீவ்காந்தியைத் தேடினார்கள்.



ராஜீவ் காந்தியைத் தேடுகிறார்கள். மூப்பனார், ஜெயந்தி நடராஜன்

ஜெயந்தி நடராஜன் துணிச்சலான பெண்மணி. பிணங்களுக்கு இடையே ராஜீவ் காந்தி கிடந்துவிடக்கூடாதே என்று வேண்டியபடியே தேடிக் கொண்டிருந்தார்.

ராஜீவ்காந்தியின் பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவர் பிரதீப் குப்தா. அவர் தரையில் மல்லாந்து கிடப்பதை ஜெயந்தி நடராஜன் பார்த்துவிட்டார். மூப்பனாரும் அவரைக் கவனித்துவிட்டார்.

பிரதீப் குப்தாவின் உடல் முழுக்க இரத்தம். அவர் ஏதோ முனகிக் கொண்டிருந்தார்.

மூப்பனார் மடங்கி அமர்ந்து, பிரதீப் குப்தாவின் தலையைத் தூக்கி உடலை அசைக்க முயற்சி செய்தார்.

மூப்பனாரைப் பார்த்து குப்தா ஏதோ முனகினார். 'ராஜீவ்ஜி எங்கே' என்று அழுதபடியே கேட்டார் மூப்பனார்.

குப்தா ஏதோ சொல்வதற்காக உதடுகளை அசைத்தார். வார்த்தைகள் வரவில்லை. காற்றுத்தான் வந்தது. மறு நொடியே அவர் தலை துவண்டுபோனது. மூப்பனார் தன் தலையில் அடித்துக்கொண்டார்.

அதே நேரம் ஜெயந்தி நடராஜ னின் பார்வை பிரதீப் குப்தாவின் கால் முட்டியருகே சென்றது.

அங்கே.. அங்கே... கண்ட காட்சியால் ஜெயந்தி நடராஜனுக்கு மயக்கம் வருவது போலிருந்தது.

தன்னையறியாமலேயே ஜெய்ந்தி நடராஜன் வாய்விட்டு கத்தியபோதுதான் மூப்பனாரும் கவனித்தார்.

பிரதீப் குப்தாவின் முட்டிமீது ஒரு தலை குப்புறக் கிடந்தது.

பின் தலையைப் பார்த்ததுமே அது ராஜீவின் தலை என்பது மூப்பானார், ஜெயந்தி நடராஜன் இருவருக்கும் தெரிந்துவிட்டது.

'எல்லாம் முடிந்து போய்விட்டது, எல்லாமே முடிந்து போய்விட்டது' என்று மூப்பனார் ஒரு குழந்தை போன்று அழத் தொடங்கிவிட்டார்.

பிரதீப் குப்தா என்ற பாதுகாப்பு அதி காரி, மார்ச் மாதத்தில் இந்திய சஞ்சிகை யான 'இந்தியா ருடே' செய்தியாளரிடம், "பாதுகாப்புக் குறித்து ராஜீவ் காந்தி அசட்டையாக இருக்கிறார். ஆனால் நாங்கள் ஜாக்கிரதையாக இருக்கிறோம். ராஜீவ் ஜிக்கு ஏதாவது நிகழ்ந்தால் அது என் பிணத்தின் மீதுதான் நடக்கும்" என்று கூறியிருந்தார்.

பிரதீப் குப்தா இறந்த பின்னர் 'இந்தியா ருடே' அவர் கூறியதை வெளியிட்டது.

ராஜீவ் காந்தியுடன் செங்கல்பட்டு மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் முகமது இக்பாலும் கொல்லப்பட்டிருந்தார். பெரம்புதூர் பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்தவர் அவர்தான்.

ராஜீவ் கொல்லப்பட்ட செய்தி மறுநாள் காலையில்தான் இந்தியா முழுக்கப் பரவியது.

### காரணம் யார்

ராஜீவ் கொலைக்கு காரணம் யார்? உடனடியாக கிளம்பிய கேள்வி அதுதான்.

விடுதலைப் புலிகளா?

சீக்கிய தீவிரவாதிகளா?

எங்கும் அதே கேள்விதான் எதிரொலித்தது.

கொலை நடந்த செய்தி அறிந்ததும், இந்திய உளவுப் பிரிவுகளில் ஒன்றான 'றோ' இலண்டனில் இருந்த கிட்டுவுடன் தொடர்பு கொண்டது.

கிட்டுவுடன் தொடர்ந்தும் தொடர்பை பேணி வந்தது 'றோ'. அதனால் உடனடியாகத் தொடர்பு கொண்டு விசாரித்தது.

"எமக்கும் இக் கொலைக்கும் தொடர்பு கிடையாது" என்று திட்டவட்டமாக கூறிவிட்டார் கிட்டு.

கிட்டுவுக்கு உண்மையிலேயே அப்போது தகவல் தெரிந்திருக்கவில்லை.

ஆனால் கிட்டுவே அப்படி திட்டவட்டமாக மறுத்தமையால், புலிகளுக்கும் இக் கொலைக்கும் தொடர்பில்லை என்று அரசுக்கு கூறிவிட்டது 'றோ'.

இதனால் கொலைக்கு யார் காரணம் என்று உடனடியாக கூறமுடியாத நிலை இந்திய அரசுக்கு ஏற்பட்டது.

கலிபோர்னியாவில் உள்ள பத்திரிகை அலுவலகம் ஒன்றுக்கு மர்ம தெலைபேசி அழைப்பு.

"விடுதலைப் புலிகள் பேசுகிறோம். ராஜீவ் கொலைக்கு நாங்கள்தான் காரணம்" என்று அந்த மர்மக்குரல் கூறியது.

புலிகளை மாட்டிவிட வேறு சக்திகள் செய்த சதிதான் ராஜீவ் கொலையோ? என்று அதனால் சந்தேகம் ஏற்பட்டது.

### மறுப்பறிக்கை

விடுதலைப் புலிகளது சர்வதேச பொறுப்பாளர் கிட்டு உடனடியாக மறுப்பொன்றை வெளியிட்டார்.

ராஜீவ் கொலைக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. எம்மால் மட்டும்தான் வெடி குண்டுகளை தயாரிக்க முடியும் என்றில்லை.

ராஜீவ் கொலை தொடர்பான விசாரணைக்கு உதவத் தயாராக இருக்கிறோம். இந்தியா விரும்பினால் கொலையாளிகளை கண்டு பிடிக்க உதவத் தயாராக இருக்கிறோம்' என்று கிட்டு கூறினார்.

இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பல கிட்டுவை தொடர்பு கொண்டு பேட்டிகள் எடுத்து வெளியிட்டன.

கொலையை செய்தது யார்? சந்தேகம் நீடித்தது.

கொலையான இடத்தில் உடல் சிதறிய நிலையில் கிடந்த பெண்மீது புலனாய்வாளருக்கு சந்தேகம் ஏற்பட்டது.

அப்பெண்ணின் தலை தனியாகக் கிடந்தது. இடுப்புக்கு மேற்புறம் சிதைவடைந்திருந்தது.

'உடம்பில் குண்டைக் கட்டி வந்து வெடிக்க வைத்திருக்கலாம்' என்ற சந்தேகம் அப்போதுதான் வந்தது. எனினும் அது உறுதியாக வில்லை.

பலியானவர்களது உடல்கள் யாவும் அடையாளம் காணப்பட்டுவிட்டன. அப் பெண்ணின் உடலுக்கு மட்டும் யாரும் உரிமை கோரவில்லை என்பதும் சந்தேகத்துக்கு தூபமிட்டது.

### எஸ்.ஐ.டி

ராஜீவ் கொலையை விசாரிக்க சிறப்புப் புலனாய்வு குழுவை (எஸ்.ஐ.டி) நியமித்தது மத்திய அரசு.

இக் குழுவுக்கு தலைமை ஏற்றவர் ஒரு தமிழர். பெயர் கார்த்திகேயன். ஐ.ஜி (இன்ஸ்பெக்டர் ஜெனரல்) தரத்தில் இருந்தவர். 1964ம் ஆண்டு முதல் பொலிஸ் சேவையில் இருந்தவர்.

சிறப்பு புலனாய்வுக் குழுவின் முக்கிய அதிகாரிகளாக அமுத்காந்த், அமித் வர்மா, வினோத் ராஜு, புருஷோத்தமன் ஆகியோர் நியமிக்கப் பட்டனர்.

சென்னையில் சிறப்பு புலனாய்வு குழுவுக்கு தனி அலுவலகம் தரப்பட்டது.

அதற்கு 'மல்லிகை' என்று பெயர் சூட்டப் பட்டது. அங்குதான் சூடான விசாரணைகள் ஆரம்பமாயின.

சிறப்புப் புலனாய்வுக் குழுவினருக்கும் முதலில் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்றே இருந்தது.

மே மாதம் 23ம் திகதிவரை எந்த உருப்படியான தகவலும் புலனாய்வுத் துறைக்கு கிடைக்கவில்லை.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் கமரா ஒன்று கிடந்தது.

அது ஹரிபாபுவின் கமரா என்பதோ, புலிகளுடன் தொடர்புடையவர் என்பதோ அப்போது புலனாய்வுக் குழுவினருக்கும் தெரியாது.

அந்தக் கமரா பெரும் திருப்பத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதும், பல முக்கிய தகவல்களை தனக்குள் வைத்திருக்கிறது என்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை.

அதனால் கமராவில் அதிக கவனம் செலுத்தாமல், ஏனைய விசாரணைகளில் ஈடுபட்டனர்.

இந்தியாவின் பிரபல தடவியல் நிபுணர் சந்திரசேகர். ராஜீவ் கொலை வழக்கில் இவருக்கும் முக்கிய பாத்திரம் இருக்கிறது.


தடயங்கள் ஒவ்வொன்றையும் கண்கொத்திப் பாம்பாக ஆராய்ந்த சந்திரசேகர், தற்கொலை அங்கியின் சிதறிய பாகங்களை கண்டு பிடித்தார்.

காஞ்சிபுரம் மருத்துவமனையில் தாணுவின் சிதைந்த உடலின் பாகங்கள் பாதுகாக்கப்பட்டன.

### கமரா

இதே நேரம் கொலை நடந்த இடத்தில் கிடந்த கமராவை மீட்க சுபா ஸ்ரூடியோ உரிமையாளர் சுபா சுந்தரம் பல முயற்சிகள் செய்திருக்கிறார்.

படப்பிடிப்பாளரான ஹரிபாபுவின் தந்தை அதற்கு முன்னர் சுபாசுந்தரத்தை சந்தித்து, தன் மகன் எங்கே? என்று கேட்டிருக்கிறார்.



கார்த்திகேயன்

அதற்கு சுபாசுந்தரம் சரியாக பதில் கூறவில்லை. இதனால் ஹரிபாபுவின் தந்தை பொலிசில் புகார் கொடுத்திருக்கிறார்.

கொலை நடந்த இடத்தில் கிடந்த கமரா தன்னுடையது என்றும், அதனை ஹரிபாபு பெற்றுச் சென்றதாகவும் பொலிசில் கூறிய சுபாசுந்தரம், கமராவை தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரியிருக்கிறார்.

இந்த தகவல்கள் புலனாய்வுப் பிரிவுக்கு எட்டியதும், சுபாசுந்தரம்மீது அவர்களுக்கு லேசான சந்தேகம் ஏற்பட்டது.

உடனடியாக அந்தக் கமரா எடுத்த படங்களை உற்று நோக்கினார்கள்.

நோக்க, நோக்க பல வெளிச்சங்கள் கிடைத்தன. இருட்டாக இருந்த புலனாய்வை கமரா தந்த தகவல்கள் வெளிச்சமாக்கின.

ஒரு பெண் மாலையுடன் நிற்கிறார். அவர் அருகே சிலர் நிற்கின்றனர். அதே பெண் ராஜீவ் காந்திக்கு மாலையிட நெருங்குகிறார். அதன்பின்னர் எதுவுமில்லை.

காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு விரைந்தது புலனாய்வுக் குழு.

அங்கு சிதைந்திருந்த பெண்ணின் உடலில் காணப்பட்ட சுரிதாரின் நிறமும், படத்தில் கையில் மாலையுடன் நின்ற பெண்ணின் சுரிதாரும் ஒரே நிறத்தில் இருப்பதைக் கண்டு கொண்டனர்.

தடவியல் நிபுணர் சந்திரசேகரும் அதனை உறுதி செய்தார். புலனாய்வுக் குழுவுக்கு நம்பிக்கை பிறந்தது.

அதனையடுத்து அப் பெண்ணின் தலையை வைத்து தோற்றத்தை கண்டறிய பலவிதமான முயற்சிகள் நடந்தன.

தடவியல் நிபுணர் சந்திரசேகர் தன் முயற்சியில் வெற்றிபெற்றபோது, படத்தில் உள்ள பெண்ணும், உடல் சிதறிய பெண்ணும் ஒருவர் தான் என்ற உண்மை உறுதியானது.

இக்கட்டத்தில் பெண் ஒருவரே ராஜீவை கொன்றிருக்கலாம் என்ற சந்தேகம் பத்திரிகைகள் மூலம் வெளியானது.

தமிழக காவல்துறை பொறுப்பதிகாரி யாக இருந்து ஓய்வு பெற்றவர் அருண்.

செய்திகளைப் பார்த்த அருண் புலனாய்வுக்குழுவுக்கு முக்கிய தகவல் ஒன்றை தந்தார்.

ஆங்கிலப் படம் ஒன்றில் பெண் ஒருவர் இடுப்பில் குண்டைக் கட்டிச் சென்று ஜனாதிபதியை கொலை செய்கிறார். அது போல ராஜீவ் கொலையும் நடந்திருக்கலாம் என்பதே முன்னாள் ஐ.ஜி. அருண் கூறிய ஊகம்.

அருண் கூறிய படத்தின் பெயர், 'டெல்டா ஃபோர்ஸ் II'

(ஆனால் அப்படம் வெளியாக முன்னரே ஜெய்சங்கர் நடித்த தமிழ்ப்படம் ஒன்றில் பெண் ஒருவர் இடுப்பில் குண்டோடு சென்று தாக்குதல் நடத்துவது போன்ற காட்சி வருகிறது)

அருண் கூறியதை வைத்து ஆராய்ந்த போது, அது உண்மைதான் என்பது புலனாகியது.

ராஜீவை கொல்ல வந்த பெண்ணும் குண்டை அணிந்து வந்திருக்கிறார் என்பதை தடவியல் நிபுணர் உறுதி செய்தார்.

அதனால் விசாரணையில் மேலும் முன்னேற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து அப்பெண்ணின் அருகே நின்றவர்கள்மீது புலனாய்வுத் துறையின் பார்வை பாய்ந்தது.

காங்கிரஸ் பிரமுகர்கள் பலரை அழைத்து புகைப்படங்களை காண்பித்தனர்.

கையில் மாலையுடன் நிற்கும் பெண்ணையோ, அவரது அருகில் நிற்கும் ஆட்களையோ எங்காவது பார்த்ததுண்டா, தெரியுமா? என்று துருவத் தொடங்கினார்கள்.

பலன் கிட்டவில்லை.

சிறப்புப் புலனாய்வுக்குழு அடுத்த முயற்சியில் இறங்கியது.

ராஜீவ் கொலை நடந்த இடத்தில் மர்மமாக கிடந்த கமராவில் எடுக்கப்பட்ட படம் இதுதான் என்று செய்தி கூறி பத்திரிகைகளுக்கு புகைப்படங்களை விநியோகித்தனர்.

அதற்குப் பலன் கிடைத்தது.

கையில் மாலையுடன் நின்ற பெண்ணையும், குறிப்புப் புத்தகத்துடன் நிற்கும் ஆணையும் தெரியவில்லை. ஏனைய இருவரையும் தெரியும் என்று கூறினார்கள் பலர்.

அவர்களில் ஒருவர் லதா கண்ணன். இன்னொருவர் அவரது மகள் கோகிலா கண்ணன்.

இருவரும் குண்டுவெடிப்பில் தாணுவின் அருகில் நின்று பலியானவர்கள்.

அவர்கள் அடையாளம் காணப்பட்டதால், தாணு, சிவராசன் இருவரும்தான் சந்தேகத்திற்குரியவர்கள் என்பது உறுதியானது.

அதனையடுத்து தாணு, சிவராசன் ஆகியோரது படங்களை தனித்தனியாக வெளியிட்டனர். அவர்களைப் பற்றி தகவல் தருவோருக்கு ஐந்து இலட்சம் ரூபா சன்மானம் இந்திய அரசால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகமும் அந்தத்தகவலை மும் மொழிகளிலும் விளம்பரமாக வெளியிட்டது.

இலங்கை அரசின் உளவுத்துறை மற்றும், தமிழ்க்கட்சிகளது உதவியும் கோரப்பட்டது.

இலங்கை அரசின் தேசிய புலனாய்வுத் துறையினர் தமிழ்க் கட்சிகளிடம் சிவராசன், தாணு பற்றிய தகவல்கள் இருக்குமா? என்று அறிவதற்கு ஓடுப்பட்டுத் திரிந்தனர்.

தகவல்கள் கிட்டவில்லை. யார், எவர் என்ற பெயர்களைக்கூட அறியமுடியவில்லை.

அறியமுடியாமலேயே போயிருக்கும், திருத்துறைப்பூண்டியில் புலி உறுப்பினர் ஒருவர் செய்த சிறு தவறு, புலனாய்வுக்குழுவினருக்கு ராஜீவ் கொலையின் இன்னொரு முடிச்சை அவிழ்க்க உதவியது.

(தொடர்ந்து வரும்)


### கிட்டு மறுப்பு

**- ராஜீவ் படுகொலை–புகார்களுக்கு மறுப்பு**

ராஜீவ் படுகொலைக்கும் தமது இயக்கத்திற்கும் எள்ளவும் தொடர்பில்லை என்றார் தளபதி கிட்டு.

லண்டனில் இருக்கும் விடுதலைப் புலிகளின் தளபதி கிட்டு அளித்த பேட்டி:

ராஜீவ்காந்தி படுகொலைக்கும் எங்கள் இயக்கத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. நாங்கள் ஒருபோதும் இந்திய அரசியலில் தலையிட்டது இல்லை.



நாங்கள் இதில் தலையிடவே இல்லை. காலம் வரும்போது இதை புரிந்து கொள்வீர்கள்.

**கேள்வி: இலங்கைக்கு ராஜீவ் அமைதிப்படையை அனுப்பியதைக் கண்டித்து விடுதலைப்புலிகள் புகார் கூறுகிறார்களே?**

பதில்: இந்தியாவிலேயே பல பிரச்சினைகள் உள்ளன.

**கேள்வி: தி.மு.க. ஆட்சிக் கலைப்பைக் கண்டித்து இந்த சம்பவம் நடந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறதே?**

பதில்: தி.மு.கவிற்காக செயற்பட நாங்கள் ஒன்றும் கூலிப்பட்டாளங்கள் அல்ல மேலும் தி.மு.க.மீது தனிப்பட்ட அக்கறை எதுவும் எங்களுக்குக் கிடையாது. எனவே, இந்த சம்பவத்தில் எங்களுக்கும் தி.மு.கவிற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. நீண்ட நாட்களாகவே இந்தியாவில் உள்ள அரசியல் காரணமாக எதற்கு எடுத்தாலும் எங்கள் மீது புகார் கூறுகின்றனர்.

**கேள்வி: கலிபோர்னியாவில் ஒருவர் பத்திரிக்கை அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு விடுதலைப்புலிகள் சார்பில் பேசியுள்ளார். நாங்கள் தான் ராஜீவைக் கொன்றோம் என்று கூறியுள்ளாரே?**

பதில்: ஒரு பத்திரிகை ஆபீசுக்கு போன் செய்து யாரும் எதுவும் கூறலாம். அப்படிப்பட்ட முட்டாள்கள் கலிபோர்னியாவில் அதிகம்பேர் உள்ளனர். ஆனால் பத்திரிகையாளர்கள் முட்டாள்கள் இல்லை. எனது குரல் பல பத்திரிக்கைகள் காதுக்கு நன்றாகத் தெரியும் என்றார் கிட்டு. மேலும், தனது பேட்டியில் நான் அழைப்பு விடுத்ததும் இந்திய அரசு சார்பில் தங்களை யாரும் சந்திக்கவில்லை என்றும், தமிழ் நாட்டில் நிறைய தமிழ் குழுக்கள் பயிற்சி பெற்றிருப்பதாகவும் இந்தியாவிலேயே விலை குறைவாக ஆயுதம் கிடைக்கிறது என்றும் கூறியுள்ளார்.

(இந்தியாவிலிருந்து வெளியாகும் சண்டே 23.06.91)

### விடுபட்ட தகவல்

சென்னை நந்தனத்தில் நடைபெற்ற வி.பி.சிங்கின் கூட்டத்தில் ராஜீவ் கொலைக்கான ஒத்திகை பார்க்கப்பட்டதாக விபரித்திருந்தேன் அல்லவா.

அதில் ஒரு தகவல் விடுபட்டு விட்டது. அக் கூட்டத்தில் பிரதமர் வி.பி.சிங்குக்கு தாணு மாலை அணிவித்ததுடன், அவர் காலைத் தொட்டு ஆசிவாங்குவது போலவும் பாவனை செய்துவிட்டே மேடையைவிட்டு இறங்கினார்.

ராஜீவுக்கும் மேடையில் வைத்து மாலை யிடுவதுதான் முதல் தீட்டப்பட்ட திட்டம். மேடையில் மாலை போட அனுமதி கிடையாது என்பதாலேயே திட்டத்தில் உடனடியாக மாறுதல் செய்யப்பட்டது. மேடையை நோக்கிவரும் போதே மாலையிட்டார் தாணு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்